[1981 மார்ச் 23

*வினா எண் 447—திரு. வெ. அரங்கராசன் : மாண்புமிகு நீர்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் உப்பிலியாபுரம் தொகுதியில் கொல்லிமலை அணைக்கட்டுத் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் மதிப்பீடு எவ்வளவு?

(இ) எப்போது வேலை துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : (அ) இத் திட்டம் தலைமைப் பொறியாளரின் ஆய்வில் உள்ளது.

(ஆ) மற்றும் (இ) இத் திட்டம் விரிவான ஆய்வில் உள்ளதால் இவ்வினாக்களுக்கு இடமில்லை

[முற்பகல் 10.10]

திரு. வெ. அரங்கராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்வில் உள்ளதாகக் கூறுகிறார்கள். இதை 1970-ஆம் ஆண்டி லிருந்து கிட்டத்தட்ட 10 ஆண்டுகளுக்கு மேலாக ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த ஆய்வு எப்போது முடிவடையும் ? இதை விரைவிலே செய்து முடித்தால், அங்கே கிட்டத்தட்ட 2,000 ஏக்கர்கள் வரை நிலப்பரப்பு பயனடைகின்ற சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால், இந்தத் திட்டத்தை விரைவிலே நிறைவேற்று வதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : மாண்புமிகு தலைவர் அவர்களே, கொல்லிமலை அடிவாரத்தில் புளியஞ்சோலை அருகே ரூபாய் 498 இலட்சம் செலவில் ஒரு அணை கட்டி 3,300 ஏக்கர் நிலத்திற்கு நஞ்சை பாசனமும், 3,700 ஏக்கர் நிலத்திற்கு பாசன உறுதியும் அளிக்க 1974–75 ஆம் ஆண்டில் திட்டமிடப் பட்டது. அத்திட்டம் சிக்கனமானதல்ல என்று கருதப்பட்டதால்' அதை மாற்றி துறையூர் வட்டம் படாரப்பேட்டை கிராமத்தின் அருகே உள்ள புதுப்பட்டி என்னுமிடத்தில் ஒரு அணை கட்ட

1981 மார்ச் 23]

மறு ஆய்வு நடந்து வருகிறது. இதன் மூலமாக 5,100 ஏக்கர் நிலத்திற்கு புன்செய் பாசனம் கிடைக்கும் வாய்ப்பிருக்கிறது. இதற்கு சுமாராக ரூபாய் 502 இலட்சம் செலவாகும் என்று கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. எனவே, இந்தத் திட்டம் நல்ல திட்டமாக இருக்கின்ற காரணத்தினால், வேறு ஒரு இடத்தில் அமைப்பதற்கான மறு ஆய்வு நடந்துகொண்டிருக்கிறது.

திரு. வெ. அரங்கராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது புதுப்பட்டி என்ற இடத்திலே அமைக்க மறு பரிசீலனை செய்து, அதனால் 5,000 ஏக்கர்கள் சாகுபடி செய்வதற்கான வசதி இருக்கின்றது என்ற காரணத்தினால், இந்தத் திட்டத்தை இந்த ஆண்டே நிறைவேற்றுவதற்கு, இந்த ஆய்வு எந்த அளவிலே இருக்கின்றது என்று அறிய விரும்புகிறேன்? இந்தத் திட்டம் இந்த ஆண்டே எடுத்துக்கொள்ளப்படுமா என்றும் அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவர் அவர்களே, இது தலைமைப் பொறியாளர் (ஆய்வு) அவர்களின் ஆய்வில் இருந்து வருகிறது. அவருடைய அறிக்கை வந்ததற்குப் பிறகு, அதை எடுத்துக் கொள்வது பற்றி அரசு முடிவு செய்யும். அது வரை கொஞ்சம் பொறுத்திருக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கொல்லிமலை அணைக்கட்டுத் திட்டத்தை கொல்லிமலை அடிவாரத்தில் ஏற்படுத்தினால், இந்த அணைக் கட்டு மூலம் மின்சாரம் எடுக்கவும் பயனுள்ளதாக இருக்கும். ஆகவே, இந்தத் திட்டத்தை செயல் படுத்த மின்சாரத் துறையும், நீர்பாசனத்துறையும் சேர்ந்து செயல்படுத்த அரசு விரைவிலே முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவர் அவர்களே, முதலிலே கொல்லிமலை அடிவாரத்தில் கட்டுவதாக இருந்தது. என்றாலும், சிக்கனமாக இல்லாத காரணத்தினால், வேறு ஒரு இடம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. இப்போது மாண்புமிகு உறுப்பினர் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். மின்சாரம் தயார் செய்ய வாய்ப்பிருக்கிறது என்று சொல்கிறார்கள். ஒரு வேளை அது சாத்தியமானால், அதை ஒரு நல்ல திட்டமாகக் கருதலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்தைக் கவனத்தில் கொண்டு, இதைப்பற்றி அரசு ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.